


சேலம் கிழக்கு மாவட்டம் ஆத்தூர், கெங்கவல்லி ஆகிய சட்டமன்றத் தொகுதி தேர்தல் ஒருங்கிணைப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டம் ஆத்தூரில் தனியார் திருமண மண்டபத்தில் நடைபெற்றது. இதில் வடக்கு மண்டல தேர்தல் பொறுப்பாளரும் , பொதுப்பணித் துறை அமைச்சருமான எ.வ.வேலு கலந்து கொண்டு வாக்காளர் பட்டியல் சிறப்பு திருத்தம் பணிகள் குறித்தும், கழக ஆக்கப்பணிகள் குறித்தும் ஆலோசனை மேற்கொண்டார். இக்கூட்டத்தில் கிழக்கு மாவட்டச் செயலாளர் எஸ்.ஆர்.சிவலிங்கம் எம்.பி, அமைச்சர் இரா.ராஜேந்திரன், டி.எம்.செல்வகணபதி எம்.பி., தே.மலையரசன்., மாவட்ட துணைச் செயலாளர்கள் சுரேஷ்குமார், சின்னதுரை, மாவட்டப் பொருளாளர் ஆர்.வி.ஸ்ரீராம், மாவட்ட நெசவாளர் அணி அமைப்பாளர் ஏ.ஏ. ஆறுமுகம் மற்றும் ஒருங்கிணைப்பாளர்கள் கலந்து கொண்டனர்.



பெரம்பலூர் மாவட்டம், ஆலத்தூர் மேற்கு ஒன்றியம், செட்டிக்குளம் ஊராட்சியில் பாராளுமன்ற உறுப்பினர் வளர்ச்சி நிதியில் இருந்து ரூ.3.80 இலட்சம் மதிப்பீட்டில் அமைக்கப்பட்ட சிமெண்ட் சாலையை பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கே.என்.அருண் நேரு.எம்.பி. திறந்து வைத்தார். அருகில் மாவட்ட ஆட்சியர் ச.மிருணாளினி, சட்டமன்ற உறுப்பினர் எம்.பிரபாகரன், மாவட்டக் கழகப் பொறுப்பாளர் வீ. ஜெகதீசன், ஆலத்தூர் மேற்கு ஒன்றியக் கழகப் பொறுப்பாளர் டாக்டர் செ.வல்லபன் உள்ளிட்டோர் உள்ளனர்.

# சேலத்தில் பள்ளி மாணவர்களுக்கு மிதிவண்டிகள்!

## அமைச்சர் இரா.இராஜேந்திரன் வழங்கினார்!

சேலம், நவ. 27-

சுற்றுலாத்துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் சேலம், பாரதி வித்யாலயா மேல்நிலைப் பள்ளி மற்றும் குகை நகரவை மகளிர் மேல்நிலைப் பள்ளிகளில் மாணவ, மாணவியர்களுக்கு மிதிவண்டிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் இரா. பிருந்தாதேவி, முன்னிலையில் 24.11.2025 அன்று வழங்கினார்கள். பின்னர், சுற்றுலாத்துறை அமைச்சர் தெரிவித்ததாவது:

முதலமைச்சர் அவர்கள் கடந்த நான்கரை ஆண்டுகளில் பள்ளிக் கல்வித்துறைக்கென அதிகளவிலான நிதி ஒதுக்கீடு செய்து பல்வேறு சிறப்பான திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறார்கள். அந்தவகையில் முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம், புதுமைப்பெண் திட்டம், தமிழ்ப்புதல்வன் திட்டம், நான் முதல்வன் திட்டம், பேராசிரியர் அன்பழகனார் பள்ளி மேம்பாட்டுத் திட்டத்தில் மாநில அளவில் ரூ.7500 கோடி மதிப்பீட்டில் நவீனமாக்கும் திட்டம், இல்லம் தேடிக் கல்வி திட்டம் போன்ற திட்டங்கள் சேலம் மாவட்டத்தில் சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருகிறது.

மேலும், எண்ணும் எழுத்தும் இயக்கம், பள்ளி செல்லாப் பிள்ளைகளைக் கண்டறிய செயலி, உயர் தொழில் நுட்ப ஆய்வகங்கள், வகுப்பறை உற்றுநோக்கு செயலி, முத்தமிழறிஞர் மொழி பெயர்ப்புத் திட்டம், இளந்தளிர் இலக்கியத் திட்டம், மாதிரிப் பள்ளிகள், தகைசால் பள்ளிகள், ஸ்மார்ட் வகுப்பறைகள் என பள்ளிக்கல்வித்துறையில் பல்வேறு திட்டங்களை அறிவித்துச் செயல்படுத்தி வருகிறார்கள்.

துணை முதலமைச்சர் அவர்களால் 14.11.2025 அன்று சிவகங்கை மாவட்டம், காரைக்குடியில் நடப்பாண்டிற்கான மிதிவண்டிகள் வழங்கும் திட்டத்தினை தொடங்கி வைத்ததைத் தொடர்ந்து, சேலம் மாவட்டத்தில், வேம்படிதாளம் அரசு மேல்நிலைப்பள்ளியில் மாணவ, மாணவியர்களுக்கான மிதிவண்டிகள் வழங்கி இத்திட்டம் தொடங்கி வைக்கப்பட்டது.

சேலம் மாவட்டத்தில் 2021-2022ஆம் கல்வி ஆண்டு முதல் கடந்த 4 ஆண்டுகளில் மிதிவண்டிகள் வழங்கும் திட்டத்தின் கீழ் அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் பயின்ற 51,058 மாணவர்களுக்கும், 55,123 மாணவிகளுக்கும் ஆக மொத்தம் 1,06,181 மிதிவண்டிகள் வழங்கப்பட்டுள்ளது. சேலம் மாவட்டத்தில் 2025-2026 ஆம் கல்வி ஆண்டிற்கான மிதிவண்டிகள் வழங்கும் திட்டத்தின் கீழ் அரசு மற்றும் அரசு உதவிபெறும் 178 பள்ளிகளில் 11ஆம் வகுப்பு பயிலும் 11,317 மாணவர்களுக்கும். 13,842 மாணவிகளுக்கும் ஆக மொத்தம் 25,159 மாணாக்கர்களுக்கு மிதிவண்டிகள் வழங்கப்பட்டு வருகிறது..

இன்றையதினம், சேலம், பாரதி வித்யாலயா மேல்நிலைப் பள்ளி 172 மாணர்களுக்கும், 54 மாணவியர்களுக்கும், குகை நகரவை மகளிர் மேல்நிலைப்பள்ளிகளில் பயிலும் 430 மாணவிகளுக்கும் என மொத்தம் 656 மாணவ, மாணவியர்களுக்கு மிதிவண்டிகள் வழங்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு அரசால் செயல்படுத்தக்கூடிய இதுபோன்ற பல்வேறு திட்டங்களை பள்ளி மாணவர்கள் நல்லமுறையில் பயன்படுத்தி தங்கள் வாழ்வில் சிறந்த நிலையை அடைய வேண்டுமென கேட்டுக்கொள்கிறேன். இவ்வாறு சுற்றுலாத்துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் அவர்கள் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில், சேலம் மாநகராட்சி துணை மேயர் திருமதி எம்.சாரதாதேவி, அஸ்தம்பட்டி மண்டலகுழு தலைவர் திருமதி உமாராணி, மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் திருமதி ப.மகேஸ்வரி, மாவட்ட கல்வி அலுவலர்கள் திரு.நரசிம்மன், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், அரசு அலுவலர்கள், ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் கலந்துகொண்டனர்.

### பத்திரிகையில் வந்த செய்தி உண்மையில்லை

# மாற்றுத்திறனாளிகள் நல ஆணையரகத்தில் மியூசியம் கேப்!

## தொடர்ந்து செயல்பட்டு வருகிறது!

சென்னை, நவ. 27-

மாற்றுத்திறனாளிகள் நல ஆணையரகத்தில் செயல்பட்டு வரும் மியூசியம் கேப் மூடப்படுவதாக பத்திரிக்கை பதிவில் வெளிவந்துள்ளது. மாற்றுத்திறனாளிகள் நல ஆணையரகத்தில் செயல்பட்டு வரும் மியூசியம் கேப் மூடப்படுவதாக வந்துள்ள செய்தி உண்மையல்ல. மாற்றுத்திறனாளிகள் நல ஆணையரகத்தில் செயல்பட்டு வரும் மியூசியம் கேப் தொடர்ந்து செயல்பட்டு வருகிறது என தமிழ்நாடு அரசின் செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



தஞ்சை மத்திய மாவட்ட திமுக சார்பில் மறைந்த அரசியல் மாமேதை முரசொலி மாறன் அவர்களின் 22 வது நினைவு நாளை முன்னிட்டு மாவட்ட கழக அலுவலக வாயிலில் அலங்கரிக்கப்பட்ட முரசொலி மாறனின் திருவுருவப்படத்திற்கு உயர்கல்வித்துறை அமைச்சர் முனைவர் கோ.வி.செழியன், தஞ்சை மத்திய மாவட்ட செயலாளர் துரை.சந்திரசேகரன் எம்.எல்.ஏ தெற்கு மாவட்ட பொறுப்பாளர் தி.பழனிவேல், முன்னாள் ஒன்றிய இணை அமைச்சர் எஸ்.எஸ்.பழநிமாணிக்கம், தமிழக அரசின் டெல்லி சிறப்பு பிரதிநிதி ஏ.கே. எஸ்.விஜயன், தஞ்சை நாடாளுமன்ற உறுப்பினர் ச.முரசொலி, முன்னாள் எம்.பி செ.இராமலிங்கம், தாட்கோ தலைவர் ந.இளையராஜா, சட்டமன்ற உறுப்பினர்கள் கா.அண்ணாதுரை, டி.கே.ஜி நீலமேகம், தலைமை செயற்குழு உறுப்பினர்கள் எம்.ராமச்சந்திரன், து.செல்வம், தஞ்சை மாநகரச் செயலாளர் மேயர் சண்.இராமநாதன், துணை மேயர் அஞ்சுகம் பூபதி உள்ளிட்ட கழக நிர்வாகிகள், முன்னோடிகள் உள்ளனர்.

### நாடாளுமன்றத் தொகுதி மேம்பாட்டு நிதி மூலம்

# பெரம்பலூர் மாவட்டத்தில் ரூ. 1.10 கோடியில் முடிவுற்றப் பணிகள்!

## கே.என்.அருண்நேரு எம்.பி. தொடங்கி வைத்து புதிய பணிகளுக்கு அடிக்கல்!

பெரம்பலூர்,நவ.27-

பெரம்பலூர் மாவட்டம், செட்டிகுளம், வடக்கு மாதவி, வேப்பந்தட்டை, வெங்கலம், வாலிகண்டபுரம் ஆகிய பகுதிகளில் பெரம்பலூர் நாடாளுமன்ற உறுப்பினரின் தொகுதி மேம்பாட்டு நிதியின் மூலமும் பிற திட்டங்களின் மூலமும்ரூ.1.10 கோடி மதிப்பிலான முடிவுற்ற பணிகளை தொடங்கி வைத்து, புதிய திட்டப் பணிகளுக்கு பெரம்பலூர் நாடாளுமன்ற உறுப்பினர் கே.என்.அருண் நேரு, மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி ந.மிருணாளினி தலைமையில் அடிக்கல் நாட்டினார். இந்த நிகழ்ச்சிகளுக்கு பெரம்பலூர் சட்டமன்ற உறுப்பினர் ம.பிரபாகரன் முன்னிலை வகித்தார்.

பெரம்பலூர் நாடாளுமன்ற உறுப்பினரின் தொகுதி மேம்பாட்டு நிதியின் மூலம் செட்டிகுளம், வடக்கு மாதவி, வேப்பந்தட்டை, வெங்கலம், வாலிகண்டபுரம் உள்ளிட்ட பகுதிகளில் பல்வேறு வளர்ச்சித்திட்டப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. அதனடிப்படையில், ஆலத்தூர் ஊராட்சி ஒன்றியத்திற்கு உட்பட்ட செட்டிகுளம் அரசு மேல்நிலைப்பள்ளி அருகில் நாடாளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியின் கீழ் ரூ.3.80 இலட்சம் செலவில் அமைக்கப்பட்ட சிமெண்ட் சாலையினை பெரம்பலூர் நடாளுமன்ற உறுப்பினர் கே.என்.அருண் நேரு திறந்துவைத்தார்.

மேலும், வடக்குமாதவி ஊராட்சிக்குட்பட்ட காட்டு மாரியம்மன் கோயில் பின்புறத்தில் ரூ.3.50 இலட்சம் மதிப்பீட்டில் கழிவுநீர் கால்வாயுடன் கூடிய சிறு பாலம் அமைக்கும் பணியினையும், வேப்பந்தட்டை ஊராட்சி ஒன்றியம், வேப்பந்தட்டை ஊராட்சியில் சார்பதிவாளர் அலுவலகம் அருகில் ரூ.17.92 இலட்சம் மதிப்பீட்டில் பூங்கா அமைக்கும் பணியினையும், வேப்பந்தட்டை அரசு மேல்நிலைப் பள்ளியில் ரூ.5 இலட்சம் மதிப்பீட்டிலும், வெங்கலம் அரசு மேல்நிலைப்பள்ளி வளாகத்தில் ரூ.3 இலட்சம் மதிப்பீட்டிலும், வாலிகண்டபுரம் ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளியில் ரூ.5 லட்சம் மதிப்பீட்டிலும் பேவர் பிளாக் தளம் அமைப்பதற்கான பணிகளை நாடாளுமன்ற உறுப்பினர் தொடங்கிவைத்தார். கிருஷ்ணா புரம் தெற்கு வீதியில் ரூ.3 இலட்சம் மதிப்பீட்டில் கழிவுநீர் கால்வாயுடன் கூடிய சிமெண்ட் சாலை அமைக்கும் பணியினையும், வாலிகண்டபுரத்தில் ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளி அருகில் நம்ம ஊரு நம்ம அரசு என்ற திட்டத்தின் மூலம் ரூ.3.15 இலட்சம் மதிப்பில் வாய்க்கால் தூர் வாரும் பணியினையும், வேப்பந்தட்டை காமராஜ் நகர் முதல் அன்னமங்கலம் வரை மாவட்ட ஊராட்சி பொது நிதி யிலிருந்து ரூ.47.70 இலட்சம் மதிப்பீட்டில், தார்ச் சாலை அமைக்கும் பணியினையும் தொடங்கிவைத்த பெரம்பலூர் நாடாளுமன்ற உறுப்பினர் கே.என்.அருண்நேரு எம்.ஆர்.எப் நிறுவனத்தின் சமூகப் பொறுப்பு நிதியின் மூலம் ரூ.18 லட்சம் மதிப்பில் பெரம்பலூர் அரசு தலைமை மருத்துவமனையில் அமைக்கப்பட்டுள்ள குடிநீர் சுத்திகரிப்பு நிலையத்தினையும் திறந்து வைத்தார்.

பெரம்பலூர் நாடாளுமன்ற உறுப்பினரின் தொகுதி மேம்பாட்டு நிதியில் இருந்து ரூ41.22 இலட்சம் மதிப்பிலான 7 பணிகளும், பிற திட்டங்களின் மூலம் செயல்படுத்தப்படும் ரூ.68.85 மதிப்பிலான 3 பணிகளும் என மொத்தம் ரூ.1.10 கோடி மதிப்பிலான பணிகள் இன்று தொடங்கி வைக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்வில், மாவட்ட கழக பொறுப்பாளர் வீ. ஜெகதீசன், ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் தேவநாதன், நகர்மன்றத்தலைவர் திருமதி அம்பிகா ராஜேந்திரன், பொது சுகாதாரத்துறை இணை இயக்குநர் மரு.மாரிமுத்து, முன்னாள் அரசு வழக்கறிஞர் என்.ராஜேந்திரன், முன்னாள் மாவட்ட ஊராட்சிக்குழு உறுப்பினர் டி.சி.பாஸ்கர், ஆலத்தூர் வட்டார வளர்ச்சி அலுவலர் பி.கே.சேகர், த.வாசுகி மற்றும் அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.




தருமபுரி கிழக்கு மாவட்ட தி.மு.க. அலுவலக தளபதி அரங்கத்தில் நவ. 27 ஆம் தேதி அன்று இளைஞர் எழுச்சி நாளாம் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு இளைஞர் அணி சார்பில் மாவட்டத்தில் உள்ள ஒவ்வொரு ஊராட்சிகள் தோறும் எளியோர் பயன்படும் வகையில் நலத்திட்ட உதவிகள் வழங்குதல் உள்ளிட்ட பணிகள் குறித்து தருமபுரி இளைஞர் அணியினருடன் தருமபுரி கிழக்கு மாவட்டப் பொறுப்பாளர் வழக்கறிஞர்.ஆ.மணி எம்.பி ஆலோசனைகள் வழங்கி பேசினார். கூட்டத்தில் தருமபுரி கிழக்கு மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் எம்.ஜி.எஸ்.வெங்கடேஸ்வரன்,துணை அமைப்பாளர்கள் அசோக்குமார்,கே.ஆர்.சி.செல்வராஜ்,ராஜகோபால்,கோடீஸ்வரன்,முத்தமிழன், கலைச்செல்வன்,தங்கதமிழ்ச்செல்வன் மற்றும் ஒன்றிய இளைஞர் அணியினர் கலந்து கொண்டனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### கரூர் வாசுகி முருகேசன்

### நவம்பர் 27 (2009)



**கழகக் குடும்பத்தைச் சேர்ந்த இவர் துடிப்புமிக்க வீராங்கனையாக கழகத்தில் செயலாற்றி; கழகத்தின் மீதும் தலைவர் கலைஞர் மீதும் அளவற்ற பற்றும் பாசமும் கொண்டவராக விளங்கினார்.**

**கழகம் கட்டளையிட்ட போராட்டத்தில் எல்லாம் கலந்து கொண்டு இன்முகத்துடன் சிறை சென்ற ஆற்றல்மிகு வீராங்கனையாகத் திகழ்ந்தவர்.**

**மாவட்ட மகளிர் அணி அமைப்பாளராகவும், தலைமைச் செயற்குழு உறுப்பினராகவும் பொறுப்பு வகித்த இவர், மாவட்டக் கழகச் செயலாளராக தொடர்ந்து மூன்று முறை தேர்ந்தெடுக்கப்பட்டு, தனது இறுதிமூச்சு வரை இரவுபகல் பாராமல் ஓய்வின்றி உழைத்தவர்.**

**1996ஆம் ஆண்டில் சட்டப்பேரவை உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்.**


**“பெரியாரும் அண்ணாவும் கண்ட பெண்ணுரிமைக்கோர் எடுத்துக்காட்டாய் அரிதாகச் சில வீர மகளிர் அணிவகுக்கும் வரிசையிலே ஆற்றல்மிகு வீராங்கனையாக வாய்த்தவரே! அண்ணன் நானிருக்க; ஆயிரமாயிரம் அன்பு உடன்பிறப்பனையார் கதறியழ எமைப் பிரிந்து ஏன் மறைந்தாய்? ஆறாதம்மா இந்தப் புண் எம் நெஞ்சில் என்றைக்கும் நினைவு வடுவாக வாசுகி நீ நிலைத்திருப்பாய்!” என்று தலைவர் கலைஞர் தனது இரங்கலில் தெரிவித்துள்ளார்.**

### தலைமைக் கழகம்
### தி.மு.க.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### மணப்பாறை இரா. வீராசாமி

### நவம்பர் 27 (2010)



**மணப்பாறை நகரத்திற்குட்பட்ட வட்டக் கிளைக் கழகச் செயலாளராக பணியாற்றி, அப்பகுதியில் கழகம் வளர பாடுபட்டவர்.**

**1986ல் மணப்பாறை நகர்மன்ற உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டு அப்பகுதி மக்களின் நன்மதிப்பைப் பெற்றவர்.**

**மும்முனைப் போராட்டத்திலும் – இந்தி எதிர்ப்புப் போராட்டத்திலும் பங்கேற்றவர்.**

### தலைமைக் கழகம்
### தி.மு.க.